**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**31 ஜூலை 2015 / 15 ஷவ்வால் 1436**

# <u>தற்கால நவீன உலகில் சவால்களை எதிர்கொள்வதில் முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க மாண்புகள்</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْراً وَنَذِيْرًا
وَدَاعِياً إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجاً مُنِيْراً وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْماً كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள, அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

புனிதமிக்க இந்த வெள்ளிக்கிழமை தினத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வதற்கு நாம் அனைவரும் இணைந்து கடின முயற்சி செய்வோமாக! சவால்மிக்க இந்த நவீன உலகத்தில் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்குத் தொடர்ந்து கட்டுப்பட்டு நடப்பதற்கும், அவன் நமக்குத்

தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் உறுதியான உள்ளத்தையும் ஆன்மீகத்தையும் வழங்குமாறு அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக!

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

கடந்த வாரம், ஒரு உறுதியான ஆன்மீக உணர்வு, இந்நவீன உலகில் வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வதில் நமக்கு எவ்வாறு உதவியாக இருக்கும் என்பதை நினைவூட்டப்பட்டோம். ஒரு "முஃமின்" இறை (நம்பிக்கையாளர்) தனது சன்மார்க்கக் கடமைகளை அறிவுப்பூர்வமாகவும், பொறுப்புணர்வோடும் நிறைவேற்றுவதில் நம்பிக்கையுடன் இருப்பதற்கு உறுதியான ஆன்மீகம் உதவுகிறது. ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நம்பிக்கை, சாந்தமான, அமைதியான உள்ளத்தை வழங்குகிறது. சாந்தமான உள்ளம், இந்நவீன உலக வாழ்க்கையில் ஏற்படும் மன அழுத்தங்களை எதிர்கொண்டு, அவற்றை வெற்றிகொள்வதற்கு உதவியாக இருக்கும். தற்காலத்தில், சுற்றுப் புறச்சூழ்நிலைகளின் காரணமாக, நமக்கு மட்டுமல்ல, பொதுவாக மற்ற மனிதர்கள் அனைவருக்கும் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்பட்டு, அவை மன அழுத்தங்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

அண்மையில், ஒரு வயது முதிர்ந்த பெண் தனது சொந்த பிள்ளையால் அவமரியாதை செய்யப்பட்ட செய்தியை அறிந்து நாம் அதிர்ச்சிக்குள் ளாகினோம். அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) சிங்கப்பூரில் முஸ்லிம் சமுதாயம் உட்பட அனைத்து சமுதாய மக்களும் அத்தவறான செயலுக்கு எதிராகக் குரல் எழுப்பினார்கள். இது ஒரு தவறான செயல் எனவும் கருதினார்கள்.

உண்மையில், இது போன்ற செயல்கள் ஒரு உண்மையான இறை நம்பிக்கையாளரின் ”அக்லாக்” (ஒழுக்க மாண்புகளைப்) பிரதிபலிக்க வில்லை. இது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்த போதனைகளுக்கு எதிரானதாகும்.

ஜமாஅத்தார்களே! சிலவேளைகளில், வாழ்க்கையின் பலவிதமானத் தேவைகள், நமது அன்றாட வேலைப் பளுக்கள், குடும்பத்தை நிர்வகிப்பது மற்றும் படிப்பு சம்பந்தமான தேவைகள் போன்றவற்றின் காரணமாக நாம் முற்றிலும் மன அழுத்தமிக்கவர்களாக ஆகி விடுகின்றோம். நமது மனம் அமைதியாக இல்லையெனில், பல சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்ளும் போது மிக எளிதில் சஞ்சலமடைந்து விடுவோம்; நமது பொறுமையை இழந்து விடுவோம். எந்த அளவுக்கெனில், நாம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் ”உம்மத்” (சமுதாயம்) எனும் ரீதியில் நற்பண்புகளால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வது கடமை என்பதை மறந்து விடுகின்றோம்.

ஜமாஅத்தார்களே! தமது கடுமையான வேலைப் பளுக்களின் காரணமாக அல்லது கடினமான பிரச்சனைகளை எதிர்கொண்டதன் காரணமாக, மற்றவர்களுக்கு, குறிப்பாக, நமது பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு கிருபை காட்டுவது கடமை என்பதை மறந்தவர்களில் நின்றும் நாம் ஆகி விடக் கூடாது. நமது பெற்றோர்களும் குடும்ப உறுப்பினர்களும் நமது அன்பு மற்றும் அக்கறையின் பால் அவசியமாகின்றார்கள். நாம் எவ்வளவு தான் களைப்படைந்திருந்தாலும், நாம் எதிர்கொள்ளும் பிரச்சனை எவ்வளவு தான் கடினமானதாக இருந்தாலும் நமது பெற்றோர்கள், மனைவி, மக்களை அன்புடன்

நடத்துவது அவசியமாகும். அவர்களைத் துன்புறுத்துவதோ அல்லது புறக்கணிப்பதோ கூடாது.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

இந்நவீன கால சவால்களை வெற்றிகொள்வதற்கு, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால் நமக்குப் போதிக்கப்பட்டுள்ள நல்ல மதிப்பீடுகளை வழிகாட்டியாக நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அவற்றை ஆர்வத்துடன் பின்பற்ற வேண்டும். நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட மதிப்பீடுகளில் ஒன்று, மற்றவர்களுடன் பழகும் போதும், கொடுக்கல், வாங்கல் செய்து கொள்ளும் போதும் நாகரீகமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். குறிப்பாக, நம்மை வளர்த்து ஆளாக்கிய நமது பெற்றோர்கள் இருவருக்கும் மரியாதை செய்வதும், அவர்கள் மீது அக்கறை செலுத்துவதும் பிள்ளைகள் எனும் ரீதியில் நமது கடமையாகும். சொல் அல்லது செயல்களால் அவர்களைத் துன்புறத்தவோ, அவமரியாதை செய்யவோ கூடாது. அவர்கள் விஷயத்தில் கடினமாக நடந்து கொள்வதோ. அவர்களைப் புறக்கணிப்பதோ கூடாது.

நமது பெற்றோர்களிடம் கடினமாக நடந்து கொள்வது கூடாது என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-இஸ்றா" எனும் அத்தியாயத்தின் 23-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றான்:

۞ وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعْبُدُوٓا إِلَّآ إِيَّاهُ وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَـٰنًا ۚ إِمَّا يَبْلُغَنَّ
عِندَكَ ٱلْكِبَرَ أَحَدُهُمَآ أَوْ كِلَاهُمَا فَلَا تَقُل لَّهُمَآ أُفٍّ وَلَا
تَنْهَرْهُمَا وَقُل لَّهُمَا قَوْلًا كَرِيمًا ﴿٢٣﴾

பொருள்: (நபியே!) அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான்; அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமையை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான, கண்ணியமான பேச்சையே பேசுவீராக!

ஜமாஅத்தார்களே!

நமது பெற்றோர்களுக்கு (மாமனார், மாமியார் உட்பட) எதிராக "உஃப்" எனும் வார்த்தையைக் கூடப் பயன்படுத்தக் கூடாது எனும் போது, அதை விடக் கடினமான செயல்களில் நாம் ஈடுபட்டால் அதற்கானத் தண்டனைகள் எவ்வளவு கடினமாக இருக்கும் எனச் சிந்தித்துப் பாருங்கள்! உதாரணமாக, அவர்களிடம் மூர்க்கத்தனமாக நடந்து கொள்வது, அவர்களை அதட்டுவது, அவர்களுக்கு முன்பாக சப்தங்களை உயர்த்திப் பேசுவது போன்றவை கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும். அவர்கள் என்ன தவறு செய்திருந்தாலும் அவர்களுக்கு அவமரியாதை

செய்யும் உரிமை நமக்கில்லை. அவர்களின் சில நடத்தைகள் நமக்குப் பிடிக்கவில்லையெனில் நாகரீகமாகவும், நளினமாகவும் அவர்களுடன் விவாதிக்க வேண்டும். நமக்கு ஏற்படும் மனக்குறைகள் எதுவாக இருந்தாலும் அவற்றை அவர்களுடன் நளினமாக விவாதிக்கலாம். அதே சமயம், பெற்றோர்களும் தமது பிள்ளைகளுடன் மனம் திறந்து பேசும் கலாச்சாரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான், பிள்ளைகள் தமது கருத்துக்களை மரியாதையாகவும், வெளிப்படையாகவும், நாகரீகமாகவும் தமது பெற்றோர்களுடன் விவாதிக்க முற்படுவார்கள். இரு சாராருக்கிடையே நல்ல தொடர்புகள் தொடர்ந்து இருப்பதை இது உறுதி செய்யும்.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

நமது குடும்ப உறுப்பினர்களுடன் கிருபையாக நடந்து கொள்வதுடன், சமுதாயத்துக்கான நமது கடமைகளையும் நாம் நிறைவேற்ற வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறோம். நாம் சமுதாயத்துக்கிடையே வாழ்ந்து வருகிறோம். எவரும் தனித்து வாழ்வது கடினம். எனவே, எல்லா நேரமும் நாம் நற்பண்புகளையும் நீதி நெறிமுறைகளையும் கடைப்பிடிப்பது அவசியமாகும். கருத்து வேறுபாடுகள், வாகனங்களை நிறுத்துவதற்கான இடப் பிரச்சனைகள், பொது வாகனங்களில் உட்காருமிடப் பிரச்சனை போன்ற சில்லறை விஷயங்களின் காரணமாகவும் ஏற்படுகின்றன. ஒரு சமுதாயத்தில் வாழ்வது என்பதன் பொருள், நாம் சில விஷயங்களைக் கொடுத்து வாங்குவதாகும்; மற்றவர்களைக் கவனத்தில் கொண்டு ஒருவர் மற்றவருக்கு உதவுவது ஆகும். நமது அண்டை வீட்டாருக்குத் தொல்லை தரும் செயல்களை நாம் செய்யாமலிருக்கின்றோம் என்பதை நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக, நமது அண்டை வீட்டாருக்குத்

தொல்லை தரும் வகையில் சப்தங்களை உயர்த்துதல், குப்பைகளைப் போடுதல், மணைகளின் நடைபாதைகளில் நமது உடமைகளை அசுத்தமாக விட்டுச் செல்லுதல், அதன் மூலம் அப்பாதை வழியாக நடந்து செல்லும் நமது அண்டை வீட்டார்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்துதல் போன்றவை நடைபெறாமலிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

இவையெல்லாம், சமுதாய வாழ்வின் சில முன்மாதிரிகள் ஆகும். மற்றவர்களுடன் பழகும் போது நற்பண்புகளுடன் நடந்து கொள்ள வேண்டுமென அவை வலியுறுத்துகின்றன. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஹதீதில் நவின்றுள்ளார்கள்:

”எந்த இறை நம்பிக்கையாளர் மக்களுடன் கலந்து அவர்களால் ஏற்படுத்தப்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்கின்றாரோ அவர், மக்களுடன் கலக்காமல், அவர்களால் ஏற்படுத்தப்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளாமலிருக்கும் இறை நம்பிக்கையாளரை விடச் சிறந்தவர் ஆவார்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் திர்மிதி ரஹ், இமாம் இப்னு மாஜா ரஹ்)

எல்லாம் வல்ல அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது உள்ளங்களுக்கு அமைதியை வழங்குவானாக! நற்பண்புகளைப் பின்பற்றும் பாக்கியத் தையும் நமக்கு வழங்குவானாக! நமது குடும்பத்தாருடனான நமது உறவை மகிழ்ச்சியாகவும் நன்றாகவும் ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.